# 12. யானைக்கும் பானைக்கும் சரி

## வினாக்களுக்கு விடையளிக்க

1. உழவர் யானையை எதற்காக இரவல் கேட்டார்?

   உழவர், தம் மகன் திருமண விழாவில் ஊர்வலம் விடுவதற்காக யானையை இரவல் கேட்டார்.

2. ஊர்வலம் சென்ற யானைக்கு என்ன நேர்ந்தது?

   ஊர்வலம் சென்ற யானை இறந்துவிட்டது.

3. மரியாதை இராமன் உழவரைத் தனியே அழைத்து என்ன கூறினார்?

   மரியாதை இராமன் உழவரை தனியாக அழைத்து "நாளை நீங்களாகவே நீதிமன்றத்திற்கு வரவேண்டாம். அந்த வணிகரை உங்கள் வீட்டிற்கு அனுப்புகிறேன். அவர் வரும்போது உங்கள் வீட்டுக் கதவிற்குப் பின் பழைய பானைகளை அடுக்கி வைத்து, கதவைத் தாழ்ப்பாள் போடாமல் வைத்திருங்கள். பின்னர், நடப்பதை நீதிமன்றத்தில் பார்த்துக் கொள்ளலாம்" என்று கூறினார்.

4. யானைக்கும் பானைக்கும் சரி என்ற கதை உணர்த்தும் நீதி என்ன?
   யானைக்கும் பானைக்கும் சரி என்ற கதை உணர்த்தும் நீதி:  ஆத்திரக்காரனுக்குப் புத்திமட்டு.